# BSNL ஊழியர் சங்கம்

## தமிழ் மாநிலம்

### தேவையான சிம்கார்ட்களை உடனே வழங்கு!
### கிளைகள் தோறும் ஆர்ப்பாட்டம்-13.01.2015

அன்பார்ந்த தோழர்களே,

தமிழக காவல் துறையினருக்கும் அவர் தம் குடும்பத்தாருக்கும் மொத்தமாக ஏழு CUG சிம்களை வழங்குவதற்கான ஒப்பந்தம் ஏற்பட்டு விட்டது. மொத்தமாக தமிழகம் முழுவதும் 7.70 லட்சம் சிம்கார்ட்கள் வழங்கப்பட வேண்டும். அதில் சென்னை தொலைபேசி தவிர்த்து தமிழ் மாநிலத்தில் 5.50 லட்சம் சிம்கார்ட்கள் வழங்க வேண்டும். ஆனால் இதற்காக டெல்லியில் இருந்து தமிழகத்திற்கு வெறும் ஒரு லட்சம் சிம் கார்ட்கள் மட்டுமே வழங்கப்பட்டுள்ளது. இது தவிர சாதாரண காலத்தில் தமிழகத்திற்கு மாதம் 80,000 சிம்கார்ட்கள் தேவையுள்ளது. இந்த சிம்கார்ட்களும், கடந்த நான்கு மாதங்களாக வரவில்லை. இது தொடர்பாக நமது அகில இந்திய பொது செயலாளர் தோழர் P.அபிமன்யு அவர்கள் 15.12.2014 அன்று இயக்குனர்(CM) திரு அனுபம் ஸ்ரீவத்சா அவர்களுக்கு கடிதம் ஒன்று எழுதியிருந்தார். மீண்டும், 30.12.2014 மீண்டும் ஒரு நினைவூட்டல் கடிதத்தினை எழுதினார்.

ஆனால் இதுவரை எந்த ஒரு சிம்கார்டும் வழங்கப்படாத சூழ்நிலையில் ஒரு சில மாவட்டங்களில் DUPLICATEஆக கொடுப்பதற்கு கூட சிம்கார்ட் இல்லாத நிலை. காவல்துறையின் CUG இணைப்புகள் எந்த ஒரு மாவட்டத்திலும், முழுமையாக வழங்கப்பட வில்லை. பல வாடிக்கையாளர் சேவை மையங்களில் சந்தாதாரர்களுடன் பிரச்சனை ஏற்படுகிறது. அவர்கள் கேட்கின்ற நியாயமான கேள்விகளுக்கு பதில் கொடுக்க முடியாமல் நமது தோழர்கள் தவிக்கின்றனர். இதன் தீவிரத்தை நமது மாநில சங்கம் மாநில நிர்வாகத்துடன் விவாதித்தது. புதிய சிம்கார்ட்களுக்கான டெண்டர் இன்னமும் இறுதி செய்யப்படவில்லை. விரைவில் இறுதி செய்யப்பட்டு விடும் என்று கூறுகின்றனர். ஆனால் அது இறுதி செய்யப்பட்டவுடன் அதன் தரம் பரிசோதிக்கப்பட வேண்டும். அதற்கு கால தாமதம் ஏற்படும். ஏற்கனவே டெண்டர் இறுதி செய்யப்பட்ட கேரள மாநிலத்தின் சிம்கார்டுகளின் தரம் இன்றும் கூட QA ஆல் முடித்துக் கொடுக்கப்பட வில்லை. நமது மத்திய சங்கம் கார்ப்பரேட் அலுவலகத்தில் பேசியபோது திருப்திகரமான பதில் கிடைக்கவில்லை. 12.01.2015 அன்று அவர் நேரடியாக BSNLன் CMD திரு A.N.ராய் அவர்களுக்கு கடிதம் எழுதி உள்ளார்.

**நிர்வாகத்திற்கு BSNL நிறுவனம் தொடர்பான எந்த ஒரு அக்கறையும் இல்லை என்பதற்கு இது ஒரு மிகச்சிறந்த சான்று. எனவே நிர்வாகத்தின் இந்தப் போக்கினை கண்டித்து நாளை(13.01.2015) அன்று அனைத்து கிளைகளிலும், ஆர்ப்பாட்டம் நடத்த வேண்டும் என்றும் அனைத்து மாவட்ட சங்கங்களும், கீழ்கண்ட FAXஐ DIRECTOR(CM) அவர்களுக்கு அனுப்ப வேண்டும் என தமிழ் மாநிலச் சங்கம் அறை கூவல் விட்டுள்ளது.**

இந்தப் போராட்டத்தினை அனைத்து கிளைகளிலும், சக்தியாக நடத்தி இந்த BSNLஐ காப்பாற்றும் போராட்டத்தை வெற்றிகரமாக்குவோம்.

வாழ்த்துக்களுடன்,

தோழமையுள்ள,

(A.பாபு ராதாகிருஷ்ணன்)
மாநில செயலாளர்